தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 252 | 4 Pages | 20.07.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 252 | 4 பக்கங்கள் | 20.07.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி**

**விளக்கம்:**
மழை பெய்யாமல் பொய்படுமானால், கடல்சூழ்ந்தஅகன்றஉலகமாகஇருந்தும் பசிஉள்ளேநிலைத்துநின்றுஉயிர்களை வருத்தும்.

# வினாத்தாள் விநியோகத்தில் குளறுபடி; கேரள கிளார்க் தேர்வு பாதியில் ரத்து!




திருவனந்தபுரம், ஜூலை 20

கேரளத்தில் வினாத்தாள் விநியோகித்ததில் ஏற்பட்ட குளறுபடியால் அரசு தேர்வாணைய கிளார்க் பணிக்கான தேர்வு பாதியில் ரத்து செய்யப்பட்டது. இதனால் தேர்வர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

கேரளம் மாநிலத்தில் அரசு பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்வதற்கு மாநில பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 10ம் வகுப்பு தகுதி அடிப்படையிலான கடை நிலை கிளார்க் பணிக்கான தேர்வு நேற்று காலையிலும், மாலையிலும் 2 தேர்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி தேர்வு எழுத ஆயிரக்கணக்கானோர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மையங்களுக்கு சென்று காலையில் ஆர்வமுடன் தேர்வு எழுதி கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் பாதியில் திடீரென தேர்வு ரத்து செய்யப்பட்டதாக தேர்வர்களிடம் தெரிவிக்கப்பட்டது. மேலும் தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஒரு தவறு நடந்துள்ளது என கூறி விளக்கம் அளித்துள்ளனர். இதனால் தேர்வர்கள் அதிர்ச்சி அடைந்த நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

அதே சமயத்தில் தேர்வு ரத்தானதற்கு, அதிகாரிகளின் குளறுபடி காரணமாக வினாத்தாள் கசிவு ஏற்பட்ட அதிர்ச்சி தகவல், பிறகு நடந்த விசாரணையில் வெளியானது. அதாவது. ஆலப்புழாவில் நடந்த ஒரு தேர்வு மையத்தில் பிற்பகலில் நடக்க இருந்த தேர்வுக்கான வினாத்தாளை காலையில் நடந்த தேர்வுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த குளறுபடி காரணமாக மாநிலம் முழுவதும் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாக தேர்வாணையம் அறிவித்துள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து பா.ஜனதா இளைஞரணி, மகளிரணி அமைப்பினர் திருவனந்தபுரத்தில் கேரளம் அரசு பணியாளர் தேர்வாணைய தலைமை அலுவலகம் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தேர்வாணைய தலைவர், தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் எனக்கோரி கோஷங்களை எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

# வந்தே மாதரத்துக்கு இடையூறு செய்தால் 3 ஆண்டுகள் சிறை: நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கலாகிறது

புதுடெல்லி, ஜூலை 30

வந்தே மாதரத்துக்கு இடையூறு செய்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும் என்கிற மசோதாவை நாடாளுமன்றத்தில் நாளை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை (திங்கட்கிழமை) தொடங்குகிறது. இதில் மக்களவையில் பல்வேறு மசோதாக்கள் தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. அதே நேரம் மாநிலங்களவையில் முக்கியமான ஒரு மசோதாவை முதலில் தாக்கல் செய்ய உள்ளனர். அது, வந்தே மாதரம் பாடுவதை கட்டாயமாக்கும் தேசிய கவுரவம் அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதா ஆகும். இந்த மசோதாவுக்கு சமீபத்தில் நடைபெற்ற பிரதமர் மோடி தலைமையிலான மத்திய மந்திரிசபை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி, தேசிய கீதம் அல்லது தேசியப்பாடலை (வந்தே மாதரம்) பாடுவதை வேண்டுமென்றே தடுப்பவர் அல்லது இடையூறு செய்பவர், அல்லது அவ்வாறு பாடும் கூட்டத்துக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய கீதத்துக்கு ஏற்கனவே இது போன்ற கவுரவ தடுப்பு நடவடிக்கை இருக்கும் நிலையில் வந்தே மாதரம் பாடலுக்கும் தற்போது அது நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது.

# விபத்தில் சேதமடைந்த பஸ்சை 'ஹெல்மெட்' அணிந்து ஓட்டிய டிரைவர்; வீடியோ வைரல்

திருவனந்தபுரம், ஜூலை 20

கேரளத்தில் சில தினங்களுக்கு முன்பு திருவனந்தபுரத்தில் இருந்து பத்தனம்திட்டாவுக்கு ஒரு அரசு பஸ் சென்று கொண்டிருந்தது. அந்த பஸ் பத்தனம்திட்டா அருகே கோன்னி என்ற இடத்தில் சென்றபோது சாலையோரம் நின்ற மின்கம்பத்தில் மோதியது. இந்த விபத்தில் பயணிகள் லேசான காயத்துடன் உயிர் தப்பினர். ஆனால் அந்த பஸ்சின் முன்பகுதி கண்ணாடி, முகப்பு விளக்குகள் உடைந்து பலத்த சேதமடைந்தது. இதையடுத்து பயணிகளை மாற்று பஸ்சில் அனுப்பி வைத்துவிட்டு சேதமடைந்த பஸ்சை கோன்னி அரசு பணிமனைக்கு எடுத்து சென்றனர்.

இந்த நிலையில் தற்போது மோட்டார் வாகன அதிகாரிகளின் ஆய்வுக்கு பிறகு அந்த பஸ் பராமரிப்பு பணிக்காக மாவேலிக்கரை பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. பஸ்சின் முன்பக்க கண்ணாடி முழுமையாக உடைந்து போனதால் அதை ஓட்டி சென்ற டிரைவர் ராஜேஷ் பாதுகாப்பு கருதி 'ஹெல்மெட்' அணிந்து ஓட்டி சென்றார். பொதுவாக பஸ் டிரைவர்கள் 'சீட் பெல்ட்' அணிந்து ஓட்டுவது தான் வழக்கம். ஆனால் பஸ் டிரைவர் ஹெல்மெட் அணிந்து ஓட்டியதை அனைவரும் வியப்பாக பார்த்தனர். இதனை சிலர் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளத்தில் பதிவு செய்தனர். இந்த வீடியோ தற்போது வைரலாக பரவி வருகிறது.

# ஆய்வு மேற்கொண்ட விடுதியில் மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய முதல்வர் விஜய்

சென்னை, ஜூலை 20

சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள எம்.சி. ராஜா சமூகநீதி மாணவர் விடுதியில் நேற்று முன்தினம் முதல்அமைச்சர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மேலும், மாணவர்களிடம் குறைகள் மற்றும் தேவைகளை கேட்டறிந்தார். அப்போது, விடுதியில் இருக்கும் குறைகள் மற்றும் தேவைகளை முதல் அமைச்சரிடம் வேதனையுடன் மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

குறிப்பாக,உடற்கல்விஆசிரியரை நியமிக்க வேண்டும். நவீன உடற்பயிற்சி கூடம் அமைக்க வேண்டும். உணவின் தரத்தை மேம் படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களையும் முதல் அமைச்சரிடம் மாணவர்கள் வழங்கினர். மாணவர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு முதல்அமைச்சர் உத்தரவிட்டார்.

இதையடுத்து, பல மாற்றங்கள் விடுதியில் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுகுறித்து, சமூகநீதித் துறையின் மூத்த அதிகாரி ஒருவர்கூறுகையில், மாணவர்களுக்கு தரமான உணவு வழங்கும் வகையில் விடுதியின் உணவுப் பட்டியல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இட்லி, சப்பாத்தி வழங்க




உத்தரவிடப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு தரமான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்ய கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், மூடப்பட்டிருந்த வாலி பால் மைதானம் மாணவர்கள் பயன்படுத்த திறக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இரவு 12 மணி வரை விடுதிக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். முதல் அமைச்சர் விஜய்யின் ஆய்வுக்கு அடுத்த நாளே மாணவர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் சிலவற்றுக்கு உடனடி தீர்வு காணப்பட்டிருப்பது, மாணவர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

# குடும்பத்துடன் உணவு அருந்தும் உணவகங்களில் குடிக்கலாம் என்ற கலாச்சாரத்தை அரசு கொண்டுவர நினைக்கிறது: கு.பாரதி (சிறப்பு தலைவர், தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்கம்




குடும்பத்துடன் உணவு அருந்தும் உணவகங்களில் குடிக்கலாம் என்ற கலாச்சாரத்தை அரசு கொண்டுவர நினைக்கிறது

மது விற்றுத்தான் ஆட்சியை நடத்த வேண்டிய சூழலில் அரசு நகர்கிறது

அரசு மது கடைகள் மூலம் மக்கள் பாதிக்கப்படுவதால் மறுவாழ்வு மையங்களை அதிக அளவில் அரசு நிறுவ வேண்டும்

கு.பாரதி (சிறப்பு தலைவர், தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்கம்

தமிழ்நாட்டில் ரெஸ்டோபார்களை அரசு அறிமுகம் செய்வது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்கத்தின் சிறப்பு தலைவர் வழக்கறிஞர் கு.பாரதி ,

தமிழ்நாட்டில் உணவகங்களில் மது அருந்தலாம் என்ற திட்டத்தை (ரெஸ்டோபார்களை) தமிழக அரசு செயல்படுத்த உள்ளதாக செய்திகளை கசிய விட்டிருக்கிறார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் 54 புதிய வகை மதுகளை அரசு அறிமுகப்படுத்த உள்ளனர். மது இல்ல தமிழகம் என கூறிக் கொண்டிருந்த அரசும் மதுவிலக்கு துறை என உள்ள நிலையில் மதுவை விற்று தான் ஆட்சியை நடத்த வேண்டிய சூழலை நோக்கி நகருவதை போன்று உள்ளது. மனமகிழ்மன்றங்களில் அதிக விலைக்கு மதுவை விற்றதாக இதுவரை எந்த நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. இப்படி ஒரு சூழலில் குடும்பம் மற்றும் நண்பர்களாக சாப்பிட செல்லும் இடத்தில் மது குடிக்கலாம் என்ற கலாச்சாரத்தை கொண்டுவர நினைக்கின்றனர். இது போன்ற செய்வது தமிழ்நாட்டிற்கு நல்லதும் இல்லை மதுபானத்தை நம்பி ஆட்சியை நடத்துவோம் என்ற எண்ணத்தில் இருப்பது தமிழ்நாட்டிற்கு ஆபத்தை கொண்டு வரும். உணவகங்களில் மது (ரெஸ்டோ பார்) அருந்தும் கலாச்சாரத்தை அரசு கொண்டு வருவதை நிறுத்த வேண்டும். இளைஞர்களும் சாதாரண ஏழை ஜனங்களும் மதுப்பொருள் குறித்து உடல்நலம் கெடுவது மட்டுமில்லாமல் அதிலிருந்து வெளியே வர முடியாமல் உள்ளனர். மது குடித்து உடல்நலம் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு வர மறுவாழ்வு முகாம்களை அரசு அதிக அளவில் ஏற்படுத்த வேண்டும் அரசு நடத்தும் மதுக்கடைகள் மூலம் பாதிக்கப்படுவதால் அரசு இந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஹெராய்ன், பிரவுன் சுகர் போன்ற போதைகள் மட்டும இளைஞர்களை சீரழிக்கும் பெண்களுக்கு எதிராக குற்றங்களை நிகழ்த்த காரணமாக உள்ளது என கூறமுடியது மதுவும் மக்கள் கெட்டுபோக முக்கிய காரணமாக உள்ளது. பணி நிரந்தரம் 23 ஆண்டுகள் பணி புரிந்த டாஸ்மாக் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கி மாற்று துறையில் பணி வழங்க வேண்டும் என தமிழ்நாடு டாஸ்மார்க் விற்பனையாளர்கள் நல சங்கம் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். கர்நாடகாவில் இருந்து உணவகங்களில் மது அருந்தும் திட்டத்தையும் புதிய 54 வகை மக்களையும் மற்ற மாநிலங்களை பார்த்து இத்திட்டத்தை அமல்படுத்துவதாக அமைச்சர் கூறுவது மிகப்பெரிய ஆபத்து. 54 புதிய மதுவகைகளை அறிமுகப்படுத்துகிறோம் நீங்கள் குடியுங்கள் எனக் கூறுவது போல் உள்ளது. மற்ற மாநிலங்களில் இருந்து இது போன்ற திட்டங்களை கொண்டு வரும் அரசு கேரளாவில் உள்ளது போல 35 ஆயிரம் ரூபாயிலிருந்து 70 ஆயிரம் ரூபாய் டாஸ்மாக் பணியாளர்களுக்கு வழங்க தயாராக உள்ளனரா என கேள்வி எழுப்பினார். முந்தைய ஆட்சியில் மதுபான முதலாளிகளுக்கு லாபம் சேரக்கூடாது என்பதற்காக புதிய மதுபானங்களை கொண்டு வருவது வேறு எங்கள் நோக்கம் மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான், டாஸ்மாக், மனமகிழ் மன்றங்கள், ரெஸ்டோ பார்களை கொண்டு வருவது பொதுமக்களின் உயிருக்கு தான் ஆபத்து என்பதால் தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நலங்கள் சார்பில் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம் என கூறினார்.

# மாணவர் நலன் கருத்தில் கொண்டு முதல்வரிடம் கோரிக்கை

சென்னையில் இன்று எழும்பூரில் தமிழ்நாடு ஆசிரியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் இக்ஸா மையத்தில் உயர்மட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் அவர்களுக்கு மற்றும் துறை சார்ந்த அமைச்சர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு ஆசிரியர்சங்கம்சார்பாகவாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

மாணவர்களின் உடல்நலம் மனநலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளில்பயிலும்ஒன்பதுலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் செப்டம்பர் 17ஆம் தேதி அன்று முதல் விரிவுபடுத்தப்படும் என்ற முதலமைச்சர் அறிவிப்பை தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் மனமார்ந்த வரவேற்பும் நன்றியும் தெரிவித்து கொள்கிறது என்று குறிப்பிட்டனர்.

தேர்தல் கால வாக்குறுதியாக பழைய ஓய்வூதி திட்டம், அனைத்து அரசு



உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் உருவாக்கப்பட்டது, அனைத்து வகைபள்ளிகளிலும்தூய்மைபணியாளர்கள் உடனடி நியமனம், உயர்கல்விக்கான ஊக்கத்தொகை ஊதியத்தை பழைய முறையில் தொடர்ந்து வழங்கிட, பகுதி நேர ஆசிரியர்கள் அனைவரையும் பணி நிரந்தரம்செய்தல், பதவிஉயர்வுகலந்தாய்வு கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்படாமல் உள்ளது பதவி உயர்வு கலந்தாய்வு நடைபெற்ற பிறகு பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெற வேண்டும் என்றும் இதனைப் போன்று பல்வேறு கோரிக்கைகளைமுன்வைத்துமுதல்வரிடம் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தனர்.

# விருகம்பாக்கத்தில் இரண்டு நாள் பிரம்மாண்ட ஓவிய கண்காட்சி

சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள ஆர்ட் கியூப் கேலரியில் அண்ணாநகர் பகுதியை சேர்ந்த செம்மொழி இவர் சிறு வயது முதல் ஓவியத்தில் ஆர்வம் கொண்டு இந்தியா முழுவதும் இருந்து பல்வேறு பகுதிகளில் உள்ள கோயில்கள் மயில் இயற்கை காட்சிகள், கிருஷ்ணர், கேரளா கதக்களி நடனம் உள்ளிட்ட ஓவியங்களை வரைந்து காட்சிப்படுத்தி உள்ளார் அதற்கு ஏற்றது போல் ஒளி கொடுத்து ஓவிய கேலரியில் வைத்துள்ளார் இந்த கேலரியை பார்ப்பதற்கு இந்தியா முழுவதும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது கலையில் ஆர்வமுள்ள பொதுமக்கள் சிறுவர் மற்றும் செம்மொழியின் நண்பர்களும் இன்றும் நாளையும் இந்த கண்காட்சி நடைபெறும் விருகம்பாக்கத்தில், கேகே நகர் கோயம்பேடு, அரும்பாக்கம், போரூர் ஆழ்வார் திருநகர் வடபழனி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து இன்று 200க்கும்



மேற்பட்டோர்ஓவியகண்காட்சியைகண்டு களித்தனர் மேலும் ஒரு ஓவியத்தின் விலை 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை ஓவியங்கள் விலை நிர்ணயிக்கப்பட்டது இந்நிலையில் சுமார் 9 ஓவியங்கள் விலை கொடுத்து இன்று வாங்கப்பட்டுள்ளது. அந்த ஓவிய கண்காட்சியை காட்சிப்படுத்துவதற்கு செம்மொழியின் குடும்பத்தார் பெரும் உதவியாக உள்ளதாக செம்மொழி தெரிவித்தார்.

# ஆண்டிபட்டி அருகே வருஷநாட்டில் நடைபெற்ற திறந்தவெளி கருத்தரங்கில் திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் பேச்சு

புலிகள் சரணாலயம் என்ற பெயரில் பல தலைமுறைகளாக அப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களை வெளியேற்றக் கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட்கட்சிசார்பில்தேனிமாவட்டம் ஆண்டிப்பட்டிஅருகேஉள்ளவருசநாட்டில் திறந்தவெளி கருத்தரங்கம் நடைபெற்றது

இக்கருத்தரங்கில் 2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டமனஉரிமைசட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும்உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மறு சீராய்வு மனு தாக்கல் செய்து பல ஆயிரம் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்க வேண்டும்உச்ச நீதி மன்ற உத்தரவு என்ற பெயரில் வாழ்வுரிமைக்காக விவசாயம் செய்து வரும் விவசாயிகளை வெளியேற்ற முயற்சியை வனத்துறை கைவிட வேண்டும் 2006 ஆம் ஆண்டில் வாழ்வுக்காக விவசாயம் செய்யும்வனம்சார்ந்தமக்களைவெளியேற்ற விடமாட்டோம் என்று உறுதி அளித்ததை மத்திய வனத்துறை அமைச்சர் காப்பாற்ற வேண்டும்ஆகிய கோரிக்கைகளைவலியுறுத்தி பேசப்பட்டது இக்கருத்தரங்கில் பங்கேற்று நிறைவுறை ஆற்றினார் கூட்டத்தில் முதல்வரை பார்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வலியுறுத்தி




பேசுவோம்மே லும் தமிழக அரசு சார்பில் வருசநாடு விவசாயிகளுக்கு ஆதரவாக மறு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என வலியுறுத்தி மனு கொடுப்போம்எ ங்களது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் இதே கோரிக்கை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் பேசுவார்அ ரசாங்கம் இருக்கிறது காவல்துறை இருக்கிறது சிறைச்சாலை இருக்கிறது துப்பாக்கி இருக்கிறது என யோசிக்க வேண்டாம் அமைப்பாக திரண்டு ஒன்றுபட்டு போராடினால் அனைத்தையும் தவிடுபொடி ஆக்கிவிட முடியும்எ த்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும் நாம் அதை எதிர்கொள்ள அமைப்பாக ஓரணியில் திரளவேண்டும்எங்களது பூமியை எங்களது வாழ்வாதாரத்தில் யார் தலையிட்டாலும் அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்இவ்வாறு அவர் பேசினார்

# ஈரோடு-பழனி ரயில்வே திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வலியுறுத்தி தெருமுனைப் பிரச்சாரம்: கூட்டத்தில் தீர்மானம்

ஈரோடு – பழனி ரயில்வே திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றும், அதற்காக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தெருமுனைப் பிரச்சாரங்களை நடத்த வேண்டும் என்றும் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் தொடக்கத்தில், அமைப்பின் செயல் தலைவர் சிவசங்கரின் தந்தையும், ஓய்வு பெற்ற ஆசிரியருமானவர் வயது முதிர்வின் காரணமாக இயற்கை எய்தியதையொட்டி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இதனைத் தொடர்ந்து, வரும் 17.08.2026 அன்று மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை தாராபுரம் நகரில் ஐந்து இடங்களில் தெருமுனைப் பிரச்சாரங்களை நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தாலுக்கா அலுவலகம் முன்பு, ஐந்து முக்கு, வடதாரை, பேருந்து நிலையம் மற்றும் அண்ணா சிலை பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேலும், ஏழை எளிய மக்கள், முதியோர், பொது மக்கள், வியாபாரிகள், தினக்கூலி தொழிலாளர்கள், குறு மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் குறைந்த செலவில் விரைவாக பயணம் செய்யும் வசதியை ஏற்படுத்தும் வகையில் ஈரோடு–பழனி ரயில்வே திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள அனைத்து ரயில்வே மற்றும் மெட்ரோ ரயில் திட்டங்களையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும், குறிப்பாக பொள்ளாச்சி–கரூர் ரயில் பாதை திட்டத்தையும் தாமதமின்றி செயல்படுத்த வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் செயல் தலைவர் சிவசங்கர், தலைவர் தனபால், செயலாளர் நார்திக சிதம்பரம், அமைப்பு தகவல் செய்தியாளர் மோகன்ராஜ், துணைத் தலைவர் சாகா ரஷீத், உதவிச் செயலாளர்கள் ரங்கசாமி, பாடகர் ரமேஷ், ப. மணி, செயற்குழு உறுப்பினர் பவுல்ராஜ், கார்த்திக் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவுக்கு பிறகு அ.தி.மு.க. ஒன்றிணைய சாத்தியமில்லை செங்கோட்டையன்

ஈரோடு, ஜூலை 20

ஈரோடு மாவட்டம் கோபியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் பேசியதாவது: குதிரை பேரம் தொடர்பாக அ.தி.மு.க.வினர் தங்கள் நெஞ்சில் கை வைத்து சொல்ல வேண்டும். 41 எம்.எல்.ஏ.க்களை மட்டும் வைத்துக் கொண்டு முதல்அமைச்சர் ஆகலாம் என்று கூறினார்களா? இல்லையா? இதுகுறித்து தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் தெளிவாக விளக்கியபிறகும் அதற்கு இதுவரை அ.தி.மு.க.விடம் இருந்து எந்த பதிலும் இல்லை. அதனால்தான் நாங்கள் வெளியே வருகி



றோம் என்று அந்த கட்சி எம்.எல்.ஏ.க்கள் கூறினார்கள் வட துருவமும், தென் துருவமும் ஒருபோதும் இணைய போவதில்லை. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவுக்கு பிறகு அ.தி.மு.க. ஒன்றிணைய சாத்தியம் இல்லை என்பதை காட்டும் விதமாகவே அந்த கட்சியில் இருந்து பிறர் வெளியேறி வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தூத்துக்குடி: பைக் விபத்தில் முதியவர் உயிரிழப்பு

தூத்துக்குடி, ஜூலை 20

தூத்துக்குடி மாவட்டம், காடல்குடி அருகே பைக்கில்இருந்துநிலைதடுமாறி விழுந்து காயமடைந்த முதியவர், தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தூத்துக்குடி மாவட்டம், காடல்குடி போஸ்ட் ஆபீஸ் தெருவைச் சேர்ந்த செண்பகம் மகன் நாகப்பாண்டி (வயது 68). இவர் கடந்த 5ம் தேதி தனது பைக்கில் காடல்குடியில் இருந்து விளாத்திகுளம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் எதிர்பாராத விதமாக திடீரென நிலைதடுமாறி கீழே விழுந்தார். விபத்தில் பலத்த காயமடைந்த நாகப்பாண்டியை அருகில் இருந்த பொது மக்கள் மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சைபலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார். இந்த பைக் விபத்து சம்பவம் குறித்து காடல்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாதையை ஆக்கிரமித்து வழிவிடாமல் மறித்ததோடு சுத்தியலை கொண்டு தாக்க முயற்சித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் ஆண்டிபட்டி சார்பு ஆய்வாளரின் மைத்துனர் மீது புகார்

சார்பு ஆய்வாளரின் தலையீட்டால் அவரின் மைத்துனர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஆண்டிபட்டி காவல்துறையினர்மீதுகுற்றச்சாட்டு

நேற்று கோவை மாவட்டம் துடியலூர் காவல் நிலைய காவலர் மீது பாலியல் புகார் எழுந்த நிலையில் இன்று ஆண்டிபட்டி சார்பு ஆய்வாளர் மீது அதிகார துஷ்பிரயோக புகார் எழுந்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள ரெங்கநாதபுரத்தைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் சித்ரா தம்பதியினர்.இவர்கள் அதே ஊரில் கடந்த 2013 ஆம் ஆண்டு இடம் வாங்கி வீடு கட்டி வசித்து வருகின்றனர். இந்நிலையில் இவர்களது வீட்டு தெருவில் குடியிருக்கும் ஆண்டிப்பட்டி பகுதியில் பணிபுரியும் காவல்துறை சார்பு ஆய்வாளர் சந்திரன் என்பவரின் மைத்துனரான சென்றாயபெருமாள் என்பவர் இந்த தம்பதியினர் வீட்டிற்கு செல்லும் பொதுபாதையை கடந்த ஓராண்டுக்கு முன்பு தனது பெயரிற்கு போலியாக பத்திரப்பதிவு செய்து அந்த பாதையை அடைத்து மறித்து வைத்துள்ளார். இதனால் பாலசுப்பிரமணியன் தனது வீட்டிற்கு செல்ல பாதை இல்லாமல் தவித்து வந்த நிலையில் அருகில் உள்ள நடைபாதையை மட்டுமே மாற்று வழியாக பயன்படுத்தி வந்தார். இதுகுறித்து கடந்த ஓராண்டாக தேனி மாவட்ட ஆட்சியர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆண்டிபட்டி காவல்துறை சார்பு ஆய்வாளர் சந்திரன் என்பவரின் மைத்துனர் என்பதால் அவரது தலையீட்டின் பேரில் இதுவரை புகார் பெற்றுக் கொண்டதற்கான புகார் மனு கூட தங்களுக்கு அளிக்கப்படவில்லைஎன்றும்வேதனை தெரிவிக்கும் பாலசுப்ரமணியம் சித்ரா தம்பதியினர். கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது குழந்தை கீழே விழுந்து அடிபட்டு காயம்பட்ட போது ஆம்புலன்ஸ் வீட்டுக்கு வருவதற்கு கூட அனுமதிக்காமல் குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு செல்லக்கூட முடியவில்லை என்றும் தாங்களே குழந்தையை கையில் தூக்கிக்கொண்டு தற்போது மாற்று பாதையாக பயன்படுத்தும் நடைபாதை வழியாக ஓடிச் சென்று குழந்தையை காப்பாற்றியதாகவும் மேலும் இதே பாதை வழியாக குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டிய நிலைஉள்ளதாகவேதனை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் கடந்த 14 ஆம் தேதி அடைத்துள்ள பாதையை திரும்பத் திறக்கக் கூறியபோது பொதுபாதையை அடைத்து வைத்திருக்கும் சென்றாயபெருமாள் தனது மைத்துனர் சார்பு ஆய்வாளர் சந்திரன் தூண்டுதலின்பேரில்சுத்தியலை கையில் எடுத்துக் கொண்டு தங்களை தாக்க முயற்சி செய்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அங்கிருந்து தப்பி வந்து அதுகுறித்து ஆண்டிபட்டி காவல் நிலையத்திலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் அளித்தும் தற்போதுவரை இதுகுறித்து விசாரிக்ககூட இல்லை என்றும் புகார் பெற்றுக் கொண்டதற்கான ரசீது கூட வழங்கவில்லை என்றும் கண்ணீர் மல்க புகார் கூறுகின்றனர். இதுகுறித்து தற்போதைய தமிழக முதல்வர் விஜய் அவர்களின் தனிபிரிவிற்கும் புகார் அளித்துள்ள நிலையில் எனவே தமிழகஅரசு தங்களது விசயத்தில் தலையிட்டுமுறைகேடாக பத்திரப்பதிவு செய்து அடைக்கப்பட்டுள்ள பாதையை திறந்துவிட வேண்டும் என்றும் ஓராண்டாக தங்களது புகார்குறித்துநடவடிக்கை எடுக்காதவர்கள் மீதும் இதற்கு உதவியாக இருந்த சார்பு ஆய்வாளர் சந்திரன் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் கோவை மாவட்டம்துடியலூர் காவல்நிலைய காவலர் மீது எழுந்த பாலியல் புகார் பரபரப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில்

தற்போது தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சார்பு ஆய்வாளர் மீது எழுந்துள்ள அதிகார துஷ்பிரயோக புகார் ஆண்டிபட்டி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# 'நான் இறந்தால் த.வெ.க. நிர்வாகிகள்தான் காரணம்' நகர செயலாளர் ஆடியோவால் பரபரப்பு

தர்மபுரி, ஜூலை 20

தர்மபுரிமாவட்டம்பாப்பாரப்பட்டி பேரூராட்சி பகுதியில் த.வெ.க. பொதுச்செயலாளர் ஆனந்த் பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி அந்த பகுதியில் உள்ள கோவிலில் நடந்த சிறப்பு பூஜைக்கு பென்னாகரம் எம்.எல்.ஏ.கஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் வந்தனர். அப்போது அங்கு வந்த பாப்பாரப்பட்டி நகர த.வெ.க. செயலாளர் ரமேசின் தாயார் முனியம்மாள் கட்சி நிகழ்ச்சிகளுக்கு எனது மகனுக்கு முறையான அழைப்புவரவில்லை.

இதுவரை எந்த நிகழ்ச்சிக்கும் எனது மகனை அழைக்கவில்லை என்று கேள்வி எழுப்பினார். இதனால் அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.



இந்த நிலையில் பாப்பாரப்பட்டி நகர செயலாளர் ரமேஷ் சமூக வலைத்தளத்தில் ஒரு ஆடியோ வெளியிட்டார். அதில் 28 ஆண்டுகளாக நான் விஜய் ரசிகராக போஸ்டர் ஒட்டி உள்ளேன்.

நகர செயலாளராக கட்சிக்கு ஒருநாள் கூட தவறாமல் உழைத்து உள்ளேன். ஆனால் கட்சி நிகழ்ச்சிகளுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. நான் இறந்தால் என் சாவுக்கு குறிப்பிட்ட சிலர்தான் காரணம் என்று நிர்வாகிகளின் பெயரை குறிப்பிடுகிறார்.

இந்த ஆடியோ தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# பற்கள் விழுந்த விரக்தியில் முதியவர் தற்கொலை

மதுரை, ஜூலை 20

மதுரைஜெய்ஹிந்த்புரம் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் அனைத்து பற்களும் விழுந்து உடல் நிலை சரியில்லாத காரணத்தால் ஏற்பட்ட விரக்தியில தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மதுரைஜெய்ஹிந்த்புரம் பகுதியைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் (வயது 60). இவருடைய அனைத்து பற்களும் விழுந்ததாகவும், அதனால் சரியாக உணவு சாப்பிட முடியாமல் அவதிப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் அவருக்கு உடல்நலக்குறைவு இருந்ததாகவும் தெரிகிறது. இதனால், விரக்தி அடைந்த பாலசுப்பிரமணியன் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# மதுபாட்டில்கள் கடத்தல்: போலீஸ் ஏட்டு உள்பட 3 பேர் கைது; கார் பறிமுதல்

திருவாரூர், ஜூலை 20

திருவாரூர் மாவட்டம், வாளவாய்க்கால் பகுதியில் மதுபாட்டில்கள் கடத்தல் தொடர்பாக போலீஸ் ஏட்டு உள்பட 3 பேரை கைது செய்த போலீசார் ரூ.1 லட்சம் மதிப்புள்ள புதுச்சேரி மாநில மதுபாட்டில்கள், ஒரு கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

திருவாரூர் மாவட்டம், வாளவாய்க்கால் பகுதியில் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் நடத்திய வாகனசோதனையில், காரில் கடத்தி வரப்பட்ட ரூ.1 லட்சம் மதிப்பிலான 300க்கும் மேற்பட்ட புதுச்சேரி மாநில மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுதொடர்பாககாரைக்கால் வாஞ்சியூர்பகுதியிலிருந்து மது கடத்தி வந்த மன்னார்குடி பகுதியைச் சேர்ந்த குமார் (வயது 35), அருண்குமார்(39) மற்றும் பரவாக்கோட்டை போலீஸ் நிலைய ஏட்டு கார்த்திகேயன்(40) ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்து, ஒரு காரையும் பறிமுதல் செய்தனர்.

# எர்ணாவூர் நெய்தல் நகர் நுழைவு வாயில் லிப்ட் கேட்டை திறந்து வைத்த கவுன்சிலர்

சென்னை திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட எர்ணாவூர் நெய்தல் நகர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அமைந்துள்ளது இதில் 150 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது 1000க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் இந்த பகுதியில் மக்கள் பாதுகாப்பு நலன் கருதி நெய்தல் நகர் கௌரவ தலைவர் சென்னை வடக்கு மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்டி சங்கர் ஏற்பாட்டில் நுழைவு வாயில் கேட் அமைக்கப்பட்டது



அதனை இன்று ஐந்தாவது வார்டு மாமன்ற உறுப்பினரும் வட்டக் கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நுழைவாயில் கேட்டை திறந்து வைத்தார் இதனைத் தொடர்ந்து தண்ணீர் லாரி மற்றும் கனரா வாகனம் செல்ல செயல்பட்டது அதேபோல் சிறிய பகுதியில் ரிப்பன் கட்டப்பட்டு இதில் கௌரவ தலைவர் எஸ் டி சங்கர் மற்றும் கிராம ஒருங்கிணைப்பு சங்க தலைவர் ஏழுமலை ஆகியோர்ரிப்பன்வெட்டி இருசக்கர வாகனம் செல்வதற்கு பாதையை திறந்து வைத்தனர் இந்நிகழ்ச்சியில் கிராம ஒருங்கிணைப்பு சங்க தலைவர் ஏழுமலை மற்றும் நெய்தல் நகர் சங்கத் தலைவர் ஜோதி மற்றும் செயலாளர் ஜபருல்லா, மற்றும் நெய்தல் நகர் குடியிருப்போர் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மயிலாப்பூரில் வீத லீடர்ஸ் அமைப்பினர் போதை ஒழிப்பு பேரணி

வீத லீடர்ஸ் அமைப்பின் தலைவர் அண்ணாமலையின் வழிகாட்டுதலின் படியும் சென்னை சிராஜா அவர்களின் அறிவுறுத்தலின்படியும் போதையில்லா தமிழகம் என்ற குறிக்கோளின் முதல் படியாக போதையில்லாமைலாப்பூர் என்ற பதாகைகளை ஏந்தி மயிலை ஜேபி செல்வம் தலைமையில் ராஜா அண்ணாமலைபுரம் சிக்னல் அருகில் இருந்து பொதுமக்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஊர்வலமாக சென்ற பொழுது எடுத்த படம்




இப் பேரணியில் வீத லீடர்ஸ் உறுப்பினர்கள் விக்ரம் ஏழுமலை பாலாஜி ராமலிங்கம் எத்திராஜ் சிவா ரவிக்குமார் கமல் சுரேஷ் குமார் மற்றும் பலர் பங்கேற்றனர்

# சங்கராபுரத்தில் சொத்து தகராறு காரணமாக உடன் பிறந்த சகோதரியை மிளகாய் பொடி தூவி கூட்டாளிகளுடன் சேர்ந்து வெட்டிக்கொன்ற அண்ணன்:தடுக்குச் சென்ற தங்கையின் கணவரையும் சரமாரியாக வெட்டி விட்டு கூட்டாளிகளுடன் தப்பிய ஓடிய அண்ணன்:சம்பவ இடத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் புதிய பேரூராட்சி அலுவலகம் பகுதியில் வசித்து வருபவர்தீபா இவருக்கும் இவரது சகோதரரான அதே பகுதியில் வசித்து வரும் காந்தகுமாருக்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாக சொத்து தகராறு இருந்து வந்ததாககூறப்படுகிறது, இந்த நிலையில் சங்கராபுரம் நகரப் பகுதியில் உள்ளஇவர்களதுசொத்து தொடர்பாக அடிக்கடி இருவருக்கும் தகராறு ஏற்பட்டு வந்த நிலையில் தனது தங்கையை கொலை செய்ய திட்டமிட்ட ராஜ் என்கின்ற காந்தகுமார் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து தீபா வீட்டிற்கு சென்று வழக்கம் போல் சொத்தை கேட்டு மது போதையில் தகராறில் ஈடுபட்டுள்ளதாக கூறப்பிடுகிறது, இதனால் இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது, இந்த வாய் தகராறு ஒரு கட்டத்தில் கைகலப்பாக மாறிய நிலையில் காந்த குமார் தான் மறைத்து வைத்திருந்த மிளகாய்துளை தீபாவின் முகத்தில் தூவி தீபாவை சரமாரியாக அரிவாளால் சராமாறியாக வெட்டி உள்ளார், இதனைக் கண்ட தீபாவின் கணவர் பாபு தடுக்க சென்ற போது அவரையும் சரமாரியாக வெட்டி விட்டு காந்தகுமார் அவரது கூட்டாளிகளுடன் தப்பி ஓடியுள்ளார், தலை மற்றும் உடம்பு பகுதிகளில் வெட்டியதில் படுகாயம் அடைந்த தீபா சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார் மேலும் வெட்டு காயங்களுடன் மயங்கி கிடந்த தீபாவின் கணவர் பாபுவை அக்கம் பக்கதினர் மீட்டு சங்கராபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், தொடர்ந்து இது குறித்து தகவல் அறிந்த சங்கராபுரம் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று இறந்து கிடந்த தீபாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் மேலும் கொலை சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் தப்பி ஓடிய காந்த குமார் மற்றும் அவரது கூட்டாளிகளை தீவிரமாக தேடி வருகின்றனர். சொத்து தகராறு காரணமாக உடன் பிறந்த தங்கை என கூட பாராமல் அண்ணன் கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



சங்கராபுரம் மையப்பகுதியில் உள்ள 80 சென்ட் இடத்தை தாய் அம்பிகா தீபாவிற்கு எழுதி வைத்து விட்டதாகவும் தாய் அம்பிகா இறந்து இன்றுடன் எட்டு நாட்கள் கூட ஆகவில்லை எனக் கூறப்படுகிறது, சொத்து சம்பந்தமாக காந்தகுமார் மற்றும் தீபாவிற்கு மீண்டும் வாய் தகராறு ஏற்பட்டதாகவும் இதனை தொடர்ந்து ஏற்கனவே திட்டமிட்டபடி காந்தகுமார் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து தனது சகோதரி தீபாவின் முகத்தில் மிளகாய் தூளை தூவி விட்டு சரமாரியாக வெட்டி கொன்று உள்ளதாக போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் அவசரகால ஒத்திகை



சென்னை, ஜூலை 20
கல்பாக்கம் அணுமின் நிலைய வளாகத்தை சுற்றிய பகுதிகளில் நடைபெற்ற அவசரகால ஒத்திகை நேற்று மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து பாதுகாப்புத் துறை தரப்பில் கூறப்படுவதாவது:

அணுசக்தி துறையின் கல்பாக்கம் மையத்தில் பலபிரிவுகள்செயல்பட்டு வருகின்றன. இதில் இந்திய அணுமின் கழகத்தின் கீழ் உள்ள சென்னை அணுமின் நிலையம், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், 'பாவினி' நிறுவனத்தால் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் உலை, பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் வசதிகள் ஆகியவை இதில் அடங்கும்.

அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் விதிமுறைகளின்படி, அவசரக்கால தயார்நிலை திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒருங்கிணைந்த கட்டளை, கட்டுப்பாடு, எதிர்வினை முறையில், கல்பாக்கம் அணுசக்தித் துறை மையத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வளாகத்திற்கு வெளியிலான அவசரக்கால ஒத்திகை நடத்தப்படுகிறது. உலையை மின் உற்பத்தி செயல்பாட்டிற்கு கொண்டு செல்வதற்கு முந்தைய ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்க, கல்பாக்கம் வளாகத்தை சுற்றியுள்ள அவசரக்கால திட்டமிடல் மண்டலத்தில் இந்த ஒத்திகை நேற்று நடத்தப்பட்டது.

நிகழ்வுக்கான கட்டளை அதிகாரியாக செயல்பட்ட செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் டாக்டர் எம் வீரப்பனின் தலைமையிலான மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமையால் பொதுவெளியில் இந்த ஒத்திகை நடத்தப்பட்டது. அணுமின்நிலையத்தின்நிலைய இயக்குநரும் வளாக அவசரக்கால இயக்குநருமான எஸ்.பி. செல்வகுமரன் பிஎப்பிஆர் நிலைய இயக்குநர் அல்லு ஆனந்த் ஆகியோர் தலைமையிலான கல்பாக்கம் அவசரக்கால குழு இந்த ஒத்திகைக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது.

அணுமின்நிலையத்தின் வடிவமைப்பு, சிறந்த பாதுகாப்பு ஆகியவை காரணமாக, இத்தகைய அவசரநிலை நிகழ்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக குறைவு.

ஆனாலும், ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் அதை எதிர்கொள்வதில் தயார்நிலையை சோதிப்பதே இந்த ஒத்திகையின் நோக்கமாகும்.

மாவட்டத்திலுள்ள பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எந்தவித இடையூறும் இன்றி இந்த அவசரகால ஒத்திகை நடத்தப்பட்டது.

அணுசக்தி, பேரிடர் மீட்பு ஆகியவை தொடர்புடைய பல்வேறு அமைப்புகளை சேர்ந்த சுமார் 15 மூத்த அதிகாரிகள் இச்சோதனை முயற்சியை நேரில் பார்வையிட்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் பொதுமக்களிடம் இருந்து 33.74 டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு எரியூட்டி அகற்றம்



சென்னை, ஜூலை 20
பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் இன்று (18.07.2026) 132 இடங்களில் இருந்து 33.74 டன் பழைய சோபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்தில் விஞ்ஞானமுறையில் எரியூட்டி அகற்றப்பட்டது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;


“பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளில் இருந்து பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பெற்று அகற்றும் பணி 11.10.2025 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், இன்று (18.07.2026) மட்டும் 132 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில், 33.74 டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது. இதற்காக 42 எண்ணிக்கையிலான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் “நம்ம சென்னை” செயலியில் பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதனடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயிலாடுதுறை கோவில் யானைக்கு ஓய்வு அளிக்க கோரி மனு தாக்கல் ஐகோர்ட்டில் தள்ளுபடி



சென்னை, ஜூலை 20
மயிலாடுதுறை மாவட்டம் மயூரநாதர் கோவிலில் உள்ள அபயாம்பிகை என்ற 60 வயது யானைக்கு, தமிழ்நாடு வளர்ப்பு யானைகள் பராமரிப்பு மற்றும் மேலாண்மை விதிகளின்படி ஓய்வு அளிக்க உத்தரவிட வேண்டும் எனக்கோரி கோவாவை சேர்ந்த அலோக் அஸ்வினி குப்தா என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை இன்று நடைபெற்றது. அப்போது வனத்துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், மயூரநாதர் கோவிலில் உள்ள அபயாம்பிகை என்ற யானைக்கு 57 வயது தான் ஆகிறது என்றும், அந்த யானை முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த விளக்கத்தை ஏற்ற ஐகோர்ட்டு, கோவில் யானைக்கு ஓய்வு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கு எங்களை கட்டாயப்படுத்த வேண்டாம்: அரசுக்கு பகுதிநேர சிறப்பாசிரியர்கள் கோரிக்கை



சென்னை, ஜூலை 20
தமிழ்நாடு பகுதிநேர சிறப்பாசிரியர்கள் நலக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஜெ.ஆற்றலரசு, சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள், பணியாளர்ககளை விட நாங்கள் குறைந்த ஊதியம் பெற்று வருகிறோம். 15 ஆண்டு காலமாக பணிநிரந்தரம் கேட்டு போராடி வருகிறோம்.

தற்போது அதிகாரிகளின் உத்தரவு என்று கூறி மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை செய்யுமாறு தலைமை ஆசிரியர்கள் கட்டாயப்படுத்துகின்றனர். முதலில் எங்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும். அதன்பின்னர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த உத்தரவிடலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருவண்ணாமலை: பிரபல பிரியாணி கடையில் உணவு சாப்பிட்ட 13 பேருக்கு உடல்நல பாதிப்பு உணவகம் தற்காலிக மூடல்



திருவண்ணாமலை, ஜூலை 20
திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே பிரபல பிரியாணி கடை இயங்கி வருகிறது. இங்கு உணவு சாப்பிட்ட 4 சிறுவர்கள்உட்பட 13 பேருக்கு வாந்தி உள்ளிட்ட உடல் நல பாதிப்புகள் ஏற்பட்ட நிலையில், அவர்கள் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின் அடிப்படையில், உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட உணவகத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். அங்குள்ள உணவுப் பொருட்களை சோதனை செய்த அதிகாரிகள், உணவகத்தை 14 நாட்கள் தற்காலிகமாக மூட உத்தரவிட்டுள்ளனர்.

# மது விற்பனை மூலம் அரசின் வருமானத்தை பெருக்கும் எண்ணம் இல்லை: அமைச்சர் விக்னேஷ்



கோவை, ஜூலை 20
கோவையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் விக்னேஷ் நிருபர்களுக்கு அளித்த பேட்டி அளித்தார். அதில் அவர் கூறியதாவது:

"மது விற்பனை மூலம் அரசின் வருமானத்தை பெருக்குவது என்ற வார்த்தையை தயவு செய்து தவிர்த்து விடுங்கள். அவ்வாறு மது விற்பனை மூலம் வருமானத்தை பெருக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கோ. முதல் அமைச்சருக்கோ கிடையாது. அப்படி ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இருந்திருந்தால், சமீபத்தில் 717 டாஸ்மாக் கடைகளை மூடியிருக்க மாட்டோம்.

அதை தாண்டியும் மேலும் சில கடைகளை மூடும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

மதுவுக்கு அடிமையானவர்களை மீட்டு எடுப்பதும், அடுத்த தலைமுறையினர் இந்த பிரச்சினையில் சிக்காமல் தடுப்பதுமே அரசின் உறுதியான நோக்கம்"

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் 132 இடங்களிலிருந்து 33.74 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் அகற்றம்



சென்னை, ஜூலை 20
பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் இன்று (18.07.2026) 132 இடங்களிலிருந்து 33.74 மெட்ரிக் டன் பழைய சோபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞானமுறையில் எரியூட்டி அகற்றப்பட்டது. இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பெற்று அகற்றும்பணி 11.10.2025 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், (18.07.2026) மட்டும் 132 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில், 33.74 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது. இதற்காக 42 எண்ணிக்கையிலான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் “நம்ம சென்னை” செயலியில் பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதனடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாதிய வெறுப்பைத் தூண்டும் பியூஸ் மானுஷுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும்! நயினார் நாகேந்திரன்




சென்னை, ஜூலை 20
தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

சமூகத்தொண்டர்எனும் போர்வையில் சமுதாயத்தில் நச்சு விதைகளைத் தூவி வரும் பியூஸ் மானுஷ், பிராமண குலத்தினரைத் தாழ்வுபடுத்தியும், அவர்தம் விழுமிய கலாசார அடையாளங்களை அவமதித்தும் பேசியுள்ள காணொளி கடும் கண்டனத்திற்குரியது. திருக்கோயில்களின்மாண்பையும், வழிபாட்டு நெறி முறைகளையும் அவதூறுகளால் சிதைக்க முயல்வதோடு, சாதிப்பூசல்களைத் தூண்டும் நோக்கில் நச்சு மொழிகளை உதிர்த்திருப்பது அநாகரிகத்தின் உச்சமாகும்.

ஆகவே, ஒருகுறிப்பிட்ட சமுதாயத்தை இழித்துரைத்து, மக்கள் நெஞ்சங்களில் பிரிவினைத் தீயை மூட்ட முயன்ற பியூஸ் மானுஷ் மீது தமிழக அரசும் காவல்துறையும் காலந்தாழ்த்தாது வன்மையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வருங்காலத்தில் எவரும் எந்தவொரு சமுதாயத்தின் மீதும், அவர்தம் நம்பிக்கைகளின் மீதும் அவதூறுச் சேற்றை வாரி வீச நினைக்கக்கூட அஞ்சும் அளவிற்கு முன்னுதாரணமான தகுந்த தண்டனையை வழங்க வேண்டுமெனத் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் ஒரே நாளில் 16,922 குடும்பத்தினர் சுய கணக்கெடுப்பு விவரங்களை பதிவு செய்தனர் மாநகராட்சி தகவல்



சென்னை, ஜூலை 20
மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டப் பணிகள்நேற்றுமுன்தினம் தொடங்கியுள்ளது. இந்தியாவில் முதல் முறையாக, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முழுமையாக டிஜிட்டல் முறையில் நடைபெறுகிறது. இந்த கணக்கெடுப்பு 2 கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல் கட்டமான வீட்டிப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு ஆகஸ்டு 1 முதல் ஆகஸ்டு 30 வரை நடைபெறும்.

அதற்கு முன்னதாக கடந்த 17ந்தேதி முதல் வருகிற 31ந்தேதி வரை முதன்முறையாக சுயக் கணக்கெடுப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் தங்கள் வீட்டிலிருந்தபடியே தங்களது குடும்பத்தின் விவரங்களை இணையம் வழியாகதாங்களே https://se.census.gov.in என்ற சுய கணக்கெடுப்பு இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். தங்களது சுய கணக்கெடுப்பை பதிவு செய்த பின் வழங்கப்படும் சுயகணக்கெடுப்பு பதிவு எண்ணை தங்கள் இல்லத்திற்கு வரும் கணக்கெடுப்பாளரிடம் வழங்கினால் போதுமானது.

சென்னையில் நேற்று முன்தினம் ஒரு நாள் மட்டும் 16,922 குடும்பங்கள் சுய கணக்கெடுப்பு மூலம் தகவல்களை பதிவேற்றம் செய்துள்ளனர். எனவே, சென்னையில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் இந்த சுயக் கணக்கெடுப்பிலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைத் தேர்தலில் வெற்றியை குறி வைத்து பணியாற்றுங்கள்: எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 20
தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. 47 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தற்போது, அதில் 6 எம்.எல்.ஏ.க்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்து உள்ளனர். மேலும், முன்னாள் அமைச்சர்கள் பலரும் த.வெ.க.வில் ஐக்கியமாகி உள்ளனர். இந்த நிலையில், கட்சியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விறுவிறுப்பாக மேற்கொண்டு வருகிறார். அதில் ஒரு பகுதியாக மாவட்டம் தோறும் உள்ள அ.தி.மு.க. நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை வழங்கி வருகிறார்.

அந்த வகையில் இன்று கரூர் மற்றும் நீலகிரி மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து மாலையில் விருதுநகர் மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்த கூட்டங்களின் போது, பேசிய எடப்பாடி பழனிசாமி, இடைத்தேர்தலில் வெற்றியை குறி வைத்து அனைவரும் பணியாற்றுங்கள். அ.தி.மு.க.வில் நல்ல முறையில் இருந்தவர்கள் எல்லாம் மாற்று கட்சிக்கு சென்று தங்கள் மதிப்பை இழந்து என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதை எல்லாரும் நினைத்துப் பாருங்கள். கரூர் தொகுதி ஏற்கனவே நாம் வெற்றி பெற்ற தொகுதி. எனவே, வரப்போகும் இடைத் தேர்தலிலும் கரூர் தொகுதியின் வெற்றிக் கனியை அ.தி.மு.க.வே பெற வேண்டும். கட்சியில் இருந்து சென்றவர்களைப் பற்றி பேசிக் கொண்டு இருக்காமல், அனைவரும் நம்பிக்கையோடு வெற்றிக்காக கடுமையாக உழைக்க வேண்டும். அதே போன்று, கட்சியின் வளர்ச்சிக்காகவும் நீங்கள் முழுமூச்சாக உழைக்க வேண்டும். கட்சிப் பணியை சிறப்பாக செய்பவர்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் உரிய வாய்ப்பு வழங்கப்படும். உள்ளாட்சி தேர்தலில் கோஷ்டி சண்டை போடாமல் அனைவரும் ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும். உள்ளாட்சி தேர்தலில் யாருக்கு அதிக வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்பதை பார்த்து அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்று எடப்பாடி பழனிசாமி பேசி உள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

20.07.2026

## ஈஷாவின் இலவச செஸ் பயிற்சி: குறுமைய அளவிலான போட்டியில் முதலிடம் பிடித்து அசத்திய பழங்குடியின மாணவி

கோவை, ஜூலை 20

கோவை நரசீபுரத்தில் நடைபெற்ற குறுமைய அளவிலான செஸ் போட்டியில், ஈஷா வழங்கிய பயிற்சி மூலமாக, 14 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அரசுப்பள்ளியில் படிக்கும் பழங்குடியின மாணவி நிவேதா முதலிடம் பிடித்துள்ளார்.



கோவை மாவட்டத்தில் குறுமைய அளவிலான செஸ் போட்டிகள், தொண்டாமுத்தூர் அருகே நரசீபுரத்தில் உள்ள கலைமகள் கலை அறிவியல் கல்லூரியில் 16.07.2026 (வியாழக்கிழமை) நடைபெற்றன. இதில், 70 அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில், 14 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில், நரசீபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும், பட்டியார்கோயில்பதி என்ற பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்த மாணவி நிவேதா முதல் பரிசு பெற்றார். இவர், அடுத்ததாக மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க உள்ளார்.

இந்த குறுமையப் போட்டிகளில், 11 வயதுக்கு உட்பட்டோருக்கான செஸ் போட்டியில் ஈஷா வித்யா பள்ளி மாணவி பவ்யஸ்ரீ இரண்டாமிடம் பிடித்தார். 14 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியில் ஈஷா வித்யா பள்ளி மாணவி மூனு சௌஸ்திகா இரண்டாமிடமும், மத்வராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி பூமிகா மூன்றாமிடமும் பிடித்தனர்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான பெண்கள் பிரிவில் ஈஷா வித்யா பள்ளி மாணவர்கள் நந்திதா முதலிடத்தையும் நந்தனா இரண்டாம் இடத்தையும் பிடித்தனர். அதே போன்று ஆண்களுக்கான பிரிவில் மத்வராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மிதுனேஷ் முதலிடத்தையும், ஈஷா வித்யா பள்ளி மாணவர் சச்சின் மூன்றாமிடத்தையும் பிடித்தனர். இவர்கள் அனைவருக்கும் ஈஷா சார்பில் செஸ் விளையாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

14 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் முதலிடம் பிடித்த மாணவி நிவேதா இது குறித்து கூறுகையில், "நான் உள்பட எங்கள் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு செஸ் குறித்த பெரிய அறிமுகம் கிடையாது. ஈஷா மூலமாக சுவாமி தத்யா, எங்கள் பழங்குடியின கிராமத்தில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக செஸ் விளையாட்டை கற்றுத் தந்தார். அவரது பயிற்சியால் ஆர்வமுள்ள பலர் செஸ் விளையாட்டைக் கற்றுக் கொண்டோம். தற்போது நான் மாவட்ட அளவிலானப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகிறேன். தற்போது, குறுமைய அளவில் முதலிடம் பிடித்துள்ளேன். மகிழ்ச்சியாக இருக்கிறது." என்றார். பழங்குடியின கிராம மாணவர்களுக்கு செஸ் விளையாட்டில் பயிற்சி அளிக்கும் ஈஷாவின் முழுநேர தன்னார்வலரான சுவாமி தத்யா கூறுகையில், "ஈஷாவைச் சுற்றியுள்ள பழங்குடியின மற்றும் கிராம மாணவர்களுக்கு செஸ் விளையாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்த, அவர்களுக்கு பயிற்சி அளிக்க துவங்கினோம். அவர்களும் ஆர்வத்துடன் செஸ் விளையாட்டு நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு போட்டிகளில் மிகச் சிறப்பாக விளையாடி வருகின்றனர்.

பெரும்பாலும் நகரப் பகுதிகளில் பொருளாதார வசதியுள்ள மாணவர்களால் மட்டுமே செஸ் விளையாட்டை தொடர்ந்து கற்றுக்கொண்டு போட்டிகளில் கலந்து கொள்ள முடிகிறது. பெரும்பாலும் கிராமப்புற அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இந்த விளையாட்டில் பயிற்சியும் வாய்ப்பும் கிடைப்பதில்லை. ஆனால் முறையான பயிற்சியும் ஊக்கமும் அளித்தால் செஸ் போட்டியில் கிராமங்களில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் வெற்றி பெற முடியும் என்பதற்கு இவர்கள் சான்றாக விளங்குகிறார்கள்," எனக் கூறினார்.

## மோப்பநாய் மோக்கா வீர மரணம்: 24 குண்டுகள் முழங்க அரசு இறுதி மரியாதை



நீலகிரி, ஜூலை 20

நீலகிரி மாவட்டத்தில் வீரமரணம் அடைந்த மோக்கா என்ற மோப்பநாயின் உடலுக்கு 24 குண்டுகள் முழங்க அரசு இறுதி மரியாதை செய்யப்பட்டது.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் காவல் துறையில் குற்றவாளிகளைஅடையாளம்காணும்பணியில்"மோக்கா" என்ற மோப்பநாய் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. மேலும் மோக்கா நாய் கொலை, கொள்ளை உள்ளிட்ட 26 முக்கிய குற்ற வழக்குகளைக் கண்டுபிடிக்க உதவி சாதனை படைத்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த மோக்கா ஊட்டியில் உள்ள காவல் துறை மோப்பநாய் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தது. ஆனால் சிகிக்கை பலனின்றி உயிரிழந்தது.

வீரமரணம் அடைந்த மோக்காவின் உடலுக்கு உயர் காவல் அதிகாரிகள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். மேலும் காவல் துறை சார்பில் தொடர்ந்து 24 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் ஊட்டி ஆயுதப்படை மைதானத்தில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

காவல் துறையில் பெரும் பங்காற்றிய இந்த மோப்பநாயின் மறைவு நீலகிரி மாவட்ட காவல் துறையினர் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மதுபோதையில் பொதுமக்களை அரிவாளுடன் மிரட்டிய வாலிபர் கைது

தூத்துக்குடி, ஜூலை 20

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு வீரபாண்டிய கட்டபொம்மன் அரசு மேல்நிலைப்பள்ளி பகுதியில் வசித்து வரும் இசக்கி மகன் ஜெயமணிகண்டன் (வயது 25). இவர் கயத்தாறு மதுரை பிரதான சாலை, பஜாரில் ஐயர் பாலத்தின் அருகே உள்ள ஒரு தனியார் விடுதி முன்பு மதுபோதையில் கையில் அரிவாளுடன் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் ரகளையில் ஈடுபட்டுள்ளார். அந்த வழியாக வாகனங்களில் சென்றவர்களையும், பொதுமக்களையும் அரிவாளைக் காட்டி மிரட்டியுள்ளார்.

இதுகுறித்து பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில், கயத்தாறு இன்ஸ்பெக்டர் ஆனந்தகுமார் மற்றும் சப்இன்ஸ்பெக்டர் காந்திராஜன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று, அரிவாளுடன் ரகளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜெயமணிகண்டனை சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்தனர். அவர் கையில் வைத்திருந்த அரிவாளை பறிமுதல் செய்த போலீசார், அவர் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர்.

## இன்றைய ராசி பலன்கள் (20.07.2026)

மேஷம்: புதிய முயற்சிகளில் முன்னேற்றம். குடும்பத்தில் மகிழ்ச்சி. செலவுகளில் கவனம்.

பணவரவுசுமாராகஇருக்கும். வேலை தொடர்பான நல்ல செய்தி கிடைக்கலாம்.

நண்பர்களின் உதவியால் ஒரு காரியம் நிறைவேறும். உடல்நலத்தில் அக்கறை தேவை.

தொழிலில் வளர்ச்சி. குடும்பத்தினருடன் நல்ல புரிதல் ஏற்படும்.

தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய பொறுப்புகள் வரலாம்.

கல்வி, வேலை இரண்டிலும் முன்னேற்றம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

பொருளாதார நிலை மேம்படும். பயண வாய்ப்பு கிடைக்கலாம்.

பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி உறுதி. உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

புதிய வாய்ப்புகள் தேடி வரும். முதலீட்டில் நிதானம் அவசியம்.

வேலைப்பளு அதிகரிக்கலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

குடும்பத்தில் சுபநிகழ்ச்சி தொடர்பான பேச்சுகள் நடைபெறலாம். செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

மனநிம்மதி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் காண வாய்ப்பு உள்ளது.

## சென்னையில் அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழா

சென்னை, ஜூலை 20

தாய் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாள் ''தமிழ்நாடு நாள் விழா''வாக சென்னை, தரமணியில் உள்ள உலக தமிழாராய்ச்சி நிறுவன அரங்கத்தில் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றம் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில் கொண்டாடப்பட்டது. இது தொடஅர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு ள்ளதாவது; தமிழ்நாடு நாள் விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன், வரவேற்புரை ஆற்றினார். பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரை போட்டியில் முதல் பரிசு பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம் ரா. நந்தனா என்ற மாணவிக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டு சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற தேனி மாவட்டம் ர.பா.தனுஶ்ரீ என்ற மாணவிக்கு ரூ.30,000/ க்கான காசோலை, பாராட்டு சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற திருவண்ணாமலை மாவட்டம் பா. ஐஸ்வர்யா என்ற மாணவிக்கு ரூ.20,000/க்கான காசோலை, பாராட்டு சான்றிதழும் வழங்கினார்.

பேச்சு போட்டியில் முதல் பரிசு பெற்ற திருவாரூர் மாவட்டம் பி. கிஷோர் என்ற மாணவனுக்கு ரூ.50,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற கடலூர் மாவட்டம் பா. வர்ஷா என்ற மாணவிக்கு ரூ.30,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற மயிலாடுதுறை மாவட்டம் க. மனிஷா என்ற மாணவிக்கு ரூ.20,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கி விழா பேருரையாற்றினார்.

தமிழ் வளர்ச்சி துறையின் இயக்குநர் ந. அருள் நன்றியுரை ஆற்றினார்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## 'சீதையாக நடிப்பது எனக்கு கிடைத்த பாக்கியம்' 'ராமாயணம்' பட விழாவில் சாய் பல்லவி உருக்கம்



டெல்லியில் நடைபெற்ற 'ராமாயணம்' திரைப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் நடிகை சாய் பல்லவி உரையாற்றினார். அப்போது, சீதையாக நடிக்க தேர்ந்தெடுக்கப்பட்டது தனது வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய பாக்கியம் என்று அவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

எதிர்கால சந்ததியினருக்கான ஒரு காவியமாக இந்த திரைப்படம் உருவாகியுள்ளது என்று கூறிய சாய் பல்லவி, சீதையின் குணநலன்களையும் பண்புகளையும் திரையில் இயல்பாக வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக தியானித்து நடித்ததாக பகிர்ந்துகொண்டார். மேலும், இந்த படத்திற்காக படக்குழுவினர் கடந்த 10 ஆண்டுகளாக கடினமாக உழைத்திருப்பது பெருமைக்குரிய விஷயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இயக்குநர் நிதேஷ் திவாரி இயக்கத்தில் உருவாகி வரும் 'ராமாயணம்' திரைப்படத்தில் ரன்பீர் கபூர் ராமராகவும், சாய் பல்லவி சீதையாகவும் நடித்துள்ளனர். யாஷ் ராவணனாக நடித்துள்ள நிலையில், சன்னி தியோல் அனுமனாகவும், ரவி துபே லட்சுமணராகவும் நடித்துள்ளனர்.

இந்த பிரமாண்ட படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் மற்றும் ஹான்ஸ் ஜிம்மர் இணைந்து இசையமைத்துள்ளனர். இரண்டு பாகங்களாக உருவாகி வரும் இந்த திரைப்படத்தின் முதல் பாகம் வரவிருக்கும் தீபாவளிக்கும், இரண்டாம் பாகம் அடுத்த ஆண்டு தீபாவளிக்கும் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

## இயக்குநராக முதல் தேசிய விருது 'எண்ணம் போல் வாழ்க்கை'... தனுஷ் நெகிழ்ச்சி



இயக்குநராக முதல் தேசிய விருதை பெற்றதற்கு தனுஷ் நெகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

72வது தேசிய திரைப்பட விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. 2024ம் ஆண்டு சென்சார் சான்றிதழ் பெற்ற திரைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் தமிழ் திரையுலகை சேர்ந்த பல திரைப்படங்களும், கலைஞர்களும் பல்வேறு பிரிவுகளில் தேசிய அளவிலான உயரிய அங்கீகாரத்தை பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

இதில் தனுஷின் "ராயன்" சிறந்த தமிழ் படமாகவும், "கேப்டன் மில்லர்" படத்திற்காக அவருக்கு சிறப்பு விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நெகிழ்ச்சியுடன் அறிக்கை வெளியிட்டுள்ள தனுஷ், "நடிகராக 3வது விருதை விட, இயக்குநராக பெற்ற முதல் தேசிய விருது என் வாழ்நாளில் மறக்க முடியாத ஆசீர்வாதம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தனது வெற்றியை ரசிகர்களுக்கும், ஆதரவளித்த ஊடகங்களுக்கும் சமர்ப்பித்த அவர், "எண்ணம் போல் வாழ்க்கை" என ஹர ஹர மகாதேவ் முழக்கத்துடன் நன்றியை பகிர்ந்துள்ளார்.

## ஓ.டி.டி.யில் வெளியாகும் "பாலன் தி பாய்" திரைப்படம்... எதில், எப்போது பார்க்கலாம்?

'பாலன் தி பாய்' திரைப்படம் வரும் ஜூலை 31 ஆம் தேதி ஜீ5 ஒடிடி தளத்தில் வெளியாகவுள்ளது.

சிதம்பரம் இயக்கத்தில் வெளியான 'மஞ்ஞுமல் பாய்ஸ்' திரைப்படம் தென்னிந்தியளவில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. உலகளவில் ரூ. 225 கோடி வசூலித்து சாதனை செய்தது. இதனைத் தொடர்ந்து, சிதம்பரம் 'பாலன் தி பாய்' திரைப்படத்தை இயக்கியுள்ளார். இதன் கதையை 'ஆவேஷம்' பட இயக்குநர் ஜித்து மாதவன் எழுதியுள்ளார். படத்திற்கு சுஷின் ஷியான் இசையமைக்க, சிஜு காலித் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்த படத்தை கே.வி.என் நிறுவனம் மற்றும் தேஸ்பியன் பிலிம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளது. இந்தப் படத்தில் முழுக்க புதுமுகங்கள் நடித்துள்ளனர். முக்கிய கதாபாத்திரங்களில் ஆதிசேஷன், பர்ஹானா பளதிங்கள் நடித்துள்ளனர். சிதம்பரம் இயக்கிய 'பாலன் தி பாய்' திரைப்படம் கடந்த ஜூன் 19 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

சஸ்பென்ஸ் திரில்லர் பாணியில் வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. இப்படம் கலவையான விமர்சங்களைப் பெற்றிருந்தாலும் உருவாக்க ரீதியாகவும் திரை எழுத்தாகவும் நல்ல அனுபவத்தைக் கொடுத்ததாகப் பலரும் குறிப்பிட்டு வந்தனர். இப்படம் ரூ.33 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளது.

இந்த நிலையில், 'பாலன் தி பாய்' திரைப்படம் வரும் ஜூலை 31 ஆம் தேதி ஜீ5 ஒடிடி தளத்தில் வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேஜர் லீக் இறுதிப்போட்டி: வாஷிங்டனுக்கு 165 ரன்கள் இலக்கு நிர்ணயித்த லாஸ் ஏஞ்சல்ஸ்



4வது மேஜர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் அமெரிக்காவில் கடந்த மாதம் 18ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. 6 அணிகள் பங்கேற்ற இத்தொடர் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

அதன்படி, ஜேசன் ஹோல்டர் தலைமையிலான லாஸ் ஏஞ்சல்ஸ் நைட் ரைடர்ஸ், ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான வாஷிங்டன் பிரிடம் அணிகள் இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளன. இறுதிப்போட்டி இன்று நடைபெற்று வருகிறது.

இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற வாஷிங்டன் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த லாஸ் ஏஞ்சல்ஸ் 19.4 ஓவரில் 164 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அந்த அணியின் பிளட்சர் அதிகபட்சமாக 47 ரன்கள் சேர்த்தார். சிறப்பாக பந்து வீசிய வாஷிங்டன் வீரர் பென் வார்ஷுஸ் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 165 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் வாஷிங்டன் பிரிடம் அணி களமிறங்கி விளையாடி வருகிறது.

## 3வது டி20: ஜிம்பாப்வே வங்காளதேசம் மோதல்



வங்காளதேச கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 1 டெஸ்ட், 3 ஒருநாள், 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் டெஸ்ட் போட்டியில் ஜிம்பாப்வே வென்றது. இதையடுத்து நடந்த ஒருநாள் தொடரையும் 21 என்ற புள்ளி கணக்கில் ஜிம்பாப்வே கைப்பற்றியது.

இதனை தொடர்ந்து நடந்த 2 டி20 போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் 11 என்ற புள்ளிக்கணக்கில் சமநிலையில் உள்ளன.

இந்நிலையில், ஜிம்பாப்வே வங்காளதேசம் இடையேயான 3வது, கடைசி டி20 போட்டி இன்று நடைபெறுகிறது. இந்திய நேரப்படி மாலை 4 மணிக்கு போட்டி தொடங்குகிறது. இப்போட்டியில் வெற்றிபெற்று டி20 தொடரை கைப்பற்ற இரு அணிகளும் போராடும் என்பதால் இன்றைய ஆட்டத்தில் பரபரப்பிற்கு பஞ்சமிருக்காது.

## உலகக் கோப்பை இறுதிப்போட்டி 96 ஆண்டுகளுக்கு பின் நிகழும் அரிய வரலாற்று மோதல்




23வது உலகக் கோப்பை கால்பந்து தொடரின் சாம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி நாளை அமெரிக்காவின் நியூஜெர்சியில் உள்ள மெட்லைப் ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது. கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்த போட்டியில், நடப்பு சாம்பியன் அர்ஜென்டினாவும் முன்னாள் சாம்பியன் ஸ்பெயினும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா இணைந்து நடத்தும் 23வது உலகக் கோப்பை தொடர் கடந்த மாதம் 11ம் தேதி தொடங்கியது. முதல் முறையாக 48 அணிகள் பங்கேற்ற இந்த தொடரில் பல முன்னணி அணிகள் எதிர்பாராத விதமாக வெளியேறின. இருமுறை சாம்பியனான உருகுவே லீக் சுற்றிலேயே வெளியேறிய நிலையில், ஜெர்மனி 2வது சுற்றிலும், ஐந்து முறை சாம்பியனான பிரேசில் 3வது சுற்றிலும் தொடரை விட்டு வெளியேறியது.

அரையிறுதியில் முன்னாள் சாம்பியனான பிரான்சை வீழ்த்தி ஸ்பெயின் தனது இரண்டாவது உலகக் கோப்பை இறுதிக்குள் நுழைந்தது. மறுபுறம், இங்கிலாந்தை தோற்கடித்த நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா, ஏழாவது முறையாக உலகக் கோப்பை இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. 1930ம் ஆண்டு நடைபெற்ற முதல் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் உருகுவே மற்றும் அர்ஜென்டினா அணிகள் மோதியிருந்தன. அதன்பிறகு, தற்போது 96 ஆண்டுகளுக்கு பிறகு, ஸ்பானிஷ் மொழி பேசும் இரண்டு நாடுகள் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் நேருக்கு நேர் மோதுவது இதுவே முதல் முறையாகும். இதனால் இந்த இறுதிப்போட்டி வரலாற்று சிறப்புமிக்க ஒன்றாக மாறியுள்ளது. மூன்று முறை உலக சாம்பியனான அர்ஜென்டினா தனது பட்டத்தை தக்கவைத்துக் கொள்ளுமா? அல்லது முன்னாள் சாம்பியனான ஸ்பெயின் மீண்டும் உலகக் கோப்பையை கைப்பற்றுமா? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் உச்சத்தை எட்டியுள்ளது. உலக கால்பந்தின் கவனத்தை ஈர்த்துள்ள இந்த இறுதிப்போட்டி ரசிகர்களுக்கு விறுவிறுப்பான விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.